1969 செப்டம்பர் 13]

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் படித்து வெளியே வருகின்ற மாணவர்கள், கம்பெனிகளில் அப்ரென்டிஸ் ஆக வேலை செய்து தேர்வு அடைய வேண்டுமென்ற நிலையில் அதற்குரிய வாய்ப்பு இல்லாமல், பலர் படித்து முடித்த பிறகு வேலையற்ற நிலையில் இருக்கிறார்கள் என்பதால் அதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தரும் வகையில் ஆங்காங்கு இருக்கும் தனியார் கம்பெனிகளில் அதிகமான அளவுக்குத் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற மாணவர்களை அப்ரென்டிஸ் ஆக எடுத்துக் கொள்ள வழி வகுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது நல்ல யோசனை. இது பற்றி அரசாங்கம் பரிசீலித்து டைரக்டர் ஆஃப் எம்ப்ளாய்மென்ட்ஸ் ஒவ்வொரு பகுதியிலுள்ள தொழில் அதிபர்களையும் சந்தித்து, நம்முடைய தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்று வருகிற மாணவர்களை ஆங்காங்குள்ள தொழிற்சாலைகளில் தேவைப் படுகிற அளவுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறுகின்ற வகையில் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

Madras–Cape Comorin Road

* 292. *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government has submitted any proposal to the Government of India to take up the Madras-Cape Comorin Road under Border Road Development Scheme by the Defence Department of the Government of India; and

(*b*) whether any financial assistance has been received under the above scheme, so far, in Tamil Nadu for any other roads?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இந்திய அரசின் பாதுகாப்புத்துறை எல்லைப்பகுதிச் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சென்னை-கன்னியாகுமரிச்சாலை (கிழக்குக் கடற் கரைச் சாலையை) அமைக்கும் பணியை எடுத்துக் கொள்வது குறித்து இந்திய அரசுக்கு செயற்குறிப்பு ஏதும் அனுப்பப்பட வில்லை.

(இ) மேற்படி திட்டத்தின் கீழ் இம்மாநிலத்தின் எந்தச் சாலையின் பொருட்டும் இந்திய அரசிடமிருந்து இதுவரை நிதி உதவி ஏதும் பெறப்படவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : இந்தியப் பாதுகாப்பு அமைச்சரகம், பாதுகாப்பு என்ற வகையில் பல கோடிக் கணக்கான ரூபாயை எல்லை ஓரச்சாலை மேம்பாட்டுக்காகச் செலவழிக்கிறது. மலை வழியை நோக்குமிடத்து அஸ்ஸாம், நாகலாந்து போன்ற வட மாநிலங்களும், கடல் வழியை நோக்கு மிடத்து ஆந்திரம், தமிழகம் போன்ற திராவிட மாநிலங்களும் எல்லை ஓர மாநிலங்களாக இருக்கின்றன. அப்படி இருக்க,

சென்னை-கன்னியாகுமரி நெடுஞ்சாலையை இத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளாததற்குக் காரணம் என்ன? ஒருவேளை தமிழ்நாடு இந்திய அரசின் எல்லைக்கு அப்பால் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது டெல்லி பாராளுமன்றத்தில் கேட்க வேண்டிய கேள்வி.

THIRU K. VINAYAKAM: Sir, my question is whether this Government have made any representation to the Centre regarding the formation of one straight road on the borders of our State near the coast?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தச் சாலையைத் தேசிய நெடுஞ்சாலையின் தரத்திற்கு உயர்த்துவதற்காக 14 கோடி ரூபாய் திட்டம் மத்திய அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. நான்காவது திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலே கவனிக்கப்படும் என்று மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது.

உளுந்தூர்ப்பேட்டை-நெய்வேலி இருப்புப் பாதை

***293 வினா.—திரு. எஸ். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்ப்பேட்டைக்கும் நெய்வேலிக்கும் இடையே ரெயில் பாதை போடும் விஷயமாக இம்மாநில சர்க்கார் மத்திய சர்க்காருக்குச் சிபார்சு செய்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்திய அரசுக்கு அவ்வித பரிந்துரை ஏதும் செய்யப்படவில்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன்: நெய்வேலி முக்கியமான பட்டணம். அங்கு செல்லுவதற்கு கடலூர் சென்று போக வேண்டும், அல்லது விருத்தாசலம் சென்று போகவேண்டும். ஆகவே, நேரான பாதை அமைப்பதற்கு மறுபடியும் பரிசீலனை செய்து மத்திய சர்க்காருக்கு நம்முடைய சர்க்கார் சிபாரிசு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் பல சாலைகளைப் போட வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் வற்புறுத்தி அவைகளுக்கே முடிவு ஏற்படாத நேரத்திலே இதற்கும் சிபாரிசு செய்வதால் எந்தவிதமான பயனும் ஏற்படாது.